**செ. கு. எண்**:10 **நாள்**:09.1.2013

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (9.1.2013) நீலகிரி மாவட்டம், கோடநாடு கூட்டுறவு நியாய விலைக் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு திட்டத்தை துவக்கி வைத்து ஆற்றிய உரை:-**

---

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களே, அரசு துறைச் செயலாளர்களே, அரசு அதிகாரிகளே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழவைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான எனதருமை உடன் பிறப்புகளே, அனைவருக்கும் முதற்கண் எனது கனிவான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று இந்த இனிய நிகழ்ச்சியில் உங்களை எல்லாம் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும் என்பது தான் எனது தலைமையிலான கழக அரசின் கொள்கை. பொங்கல் நாள் நெருங்குகிறது, இன்று இன்றைய சூழ்நிலையில் தமிழக மக்களுக்கு எந்தவிதமான குறையும் இருக்கக்கூடாது என்பது தான் இந்த நிகழ்ச்சியின் நோக்கம். பருவமழை பொய்த்து விட்டது, ஆகவே காவேரி டெல்டா மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் பயிர்கள் பிழைக்குமா, தப்புமா என்பது கேள்விக்குறியாகி உள்ளது. நமக்கு கிடைக்க வேண்டிய காவேரி நீரை கர்நாடக அரசு திறந்துவிட வில்லை, காவேரி நடுவர் மன்றத்தின் இறுதி தீர்ப்பினை மத்திய அரசிதழில் வெளியிட வேண்டுமென்று எவ்வளவு வற்புறுத்தினாலும் இன்னும் மத்திய அரசு அதனை மத்திய அரசிதழில் வெளியிடவில்லை. அதனால் நமக்கு காவேரியில் கிடைக்க வேண்டிய உரிமை, காவேரி நீரில் நமக்கு கிடைக்க வேண்டிய பங்கு உறுதி செய்யப்படவில்லை. இருப்பினும் ஏற்கெனவே டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு நிவாரண தொகுப்பினை அறிவித்திருக்கிறோம். அதன்படி, விவசாயப் பெருமக்களுக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டாலும் அது முழுவதையும் தமிழக அரசு ஈடு செய்யும் என்று ஏற்கெனவே உத்தரவாதம் அளித்திருக்கிறோம். மேலும் எந்தந்த பகுதிகளில் வறட்சி பகுதிகளாக அறிவிக்க வேண்டும், இன்னும் எந்த அளவிற்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்பதை எல்லாம் முடிவு செய்ய மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த குழு தனது ஆய்வினை மேற்கொண்டு அறிக்கையை சமர்ப்பிக்கும் முன்பே பொங்கல் திருநாள் வந்துவிடும். இந்த பொங்கல் திருநாளை தமிழக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு கொண்டாட வேண்டும் என்பதற்காகத் தான் பொது விநியோகத் திட்டத்தின் கீழ்

பொருட்களை பெறுகின்ற 1 கோடியே 84 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் விழாவை முன்னிட்டு அவர்களுக்கு 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 100 ரூபாய் ரொக்கம் ஆக மொத்தம் 160 ரூபாய் மதிப்புள்ள பொங்கல் பரிசுகள் விலையில்லா சேலையும் வேட்டியும் வழங்கப்படுகிறது. இதனால் எனது அன்பார்ந்த தமிழக மக்கள் அனைவரும் எந்த குறையும் இல்லாமல் மகிழ்ச்சியுடன் பொங்கலை கொண்டாட எனது தலைமையிலான அரசு இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறது. இன்றைய தினம் இந்த கோடநாட்டில் உள்ள ரேஷன் கடையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு இந்த பொங்கல் சிறப்பு தொகுப்பு வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் தமிழகம் முழுவதும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 1 கோடியே 84 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கும் இதே சிறப்பு பொங்கல் தொகுப்பு பரிசு அளிக்கப்படும். வருகின்ற 13ந் தேதி ஞாயிற்றுக்கிழமையாக இருந்தாலும் கூட அன்றைய தினம் கூட அனைத்து இடங்களிலும் நியாய விலைக் கடைகள் திறந்திருக்கும் என்பதை தெரிவித்துக் கொண்டு, தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க, புரட்சித் தலைவர் நாமம் வாழ்க என்று கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பெருந்திரளான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

..........................................................................

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**